முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 559**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

1. தர்மவேலிகொண்ட அரங்கா போற்றி 10.04.2021, சனிக்கிழமை
தரணிகாத்திடும் தேசிகா போற்றி
பெருமைமிக்க தொண்டர்படை கொண்டு
பேருலகை மாற்ற அற்புதம் நிகழ்த்தும் குருராஜனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகழுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்தரும் அருளமுது தந்து (உடல்வளம், மனவளம் தந்து ஆக்கம் தரும் வல்லமை உடையது ஓங்காரக் குடில் உணவு)
அகிலத்தாரை அழியாமை வழிக்கு கொண்டுசெல்லும்
3. செல்லுகின்ற ஞானியே சிவராஜயோகியே
செந்தூரான் என் சூட்சும மகா சக்தியே
வல்லமைபட உந்தனுக்கு என்பலமிருக்க
வையகம் உன்னால் மாற்றம் பெறும் என்பேன்
4. மாற்றம் தரும் மாதவசி நீயப்பா
மக்களை காத்திடும் மகா யோகி நீயப்பா
ஆற்றல் தந்து யானே உமக்கு சக்தியாயிருக்க
அரங்கனே எனும் நாமம் சொல்லும் அனைவருக்கும்
5. அனைவருக்கும் ஆறுமுகன் யானே இறங்கி காப்புதருவேன்
ஆற்றல்கூட்டி அவர்களுக்கு அழியாமை என்கின்ற
மாற்றமும் சூட்சுமமும் மகத்துவமும் அருளுவேன்
மண்ணுலகின் மகா தவயோகி நீ
6. யோகி உன் சீடர்படைகளுக்கு
உற்றசக்தியாய் யான் சக்தி ஊட்டி வர
அகிலமதில் உன்னை கண்டு தொடரும் மக்களுக்கும்
உன்கரம்பட தீட்சைபெற்ற மக்களுக்கும்
7. மக்களுக்கும் இந்த பேரிடர்காலம்
மண்ணுலகில் இடர்வாராத இடைகண்டம் இல்லாத
ஆக்கைநலம் ஆரோக்கியம் ஆயுள்கீர்த்தி தந்தருளுவேன்
அனைத்துமாக யான் உந்தன் வழி இயங்கிட
8. இயக்கம்வழி இந்த உலகமக்கள்
இனிதே ஏழாம் படைவீடு நோக்கி தொடர்ந்து வரவர
தயக்கமின்றி அவர்கள் வாழ்வில் ஏற்றமும்
தர்மபலமும் கூடி உலகில் சிறப்பார்

9. சிறப்பான அரங்கன் சொல்லுக்கும் செயலுக்கும்
சித்திதரும் அரங்கன் தர்மத்துக்கும் தயவுக்கும்
மறுப்பின்றி ஆறுமுகன் மகாசக்தியாய் இருக்க
மக்களே துறையூர் வாழ் ஞானியை நோக்கி உடன் வாரீர்வாரீர்

10. வாரீர் அரங்கன் திருவடி பற்றி
வல்லமையான ஞான வாழ்வு பெற வாரீர்
தாரீர் அரங்கன் தர்மவழி தொடர்புவழி
தர்மனாகி தரணியில் மேன்மை பெற வாரீர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.